**தலைப்பு 327 – காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் *கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.*

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என நான் தெரிவிக்கின்றேன்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்று ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். எனினும் திறைசேரியின் கணனி அச்சீட்டுக்கு குறிப்பின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கீழ் பெறுவனவுகளின் கூட்டுத்தொகையான ரூபா 19,973,024 ஆக இருந்த போதிலும் அது ரூபா 203,451 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்று மூலம் பணமாக செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் உள்ளடக்கப்படுவதால் நிதிப் பொறுப்புக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டது. |
| (ஆ) | வைப்புக் கணக்கில் ஆண்டினுள் செலவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 1,736,635 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 183,390 என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,553,245 ஆன வைப்பு பெறுவனவுகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். | வைப்புக் கணக்கில் நிதிப் பொறுப்புக்கள் தவறுதலாக ஏனைய பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கேகாலை மாவட்ட அலுவலக காணி கட்டிடங்கள், குண்டசாலை விடுமுறைக் கேந்திர கட்டிடம், கம்பஹா மாவட்ட அலுவலக கட்டிடம் மற்றும் திணைக்களத்தற்கு உரித்தான 15 வாகனங்கள் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்ததன் பின்னர் |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ரூபா 90,517 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் இனங் காணப்பட்ட பொறுப்புக்கள் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |

## 1.6.3 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை குழுக்களிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகை பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பெறுகை குழுக்களிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகை பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | கோவை மட்டத்தில் பேணப்பட்டு செல்லப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 மூலதன செலவின விடயங்களுக்குரிய 24 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 4.22 மில்லியன் மற்றும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரியதாக 08 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 19.25 மில்லியனாக மொத்தம் ரூபா ரூபா 23.47 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. | நடைமுறைச் சாத்தியமான வகையில் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு பாதீட்டு விலகலை குறைப்பதற்கு நடவடிக்கை வேண்டும். | இச்சேமிப்பு மொத்த நிதிஏற்பாட்டுன் ஒப்பிடும் போது 7 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம (1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தினால் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு 2019 ஏப்ரல் 05 ஆந் திகதி காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) <u>எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை</u> | | |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 15 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும் | 33 வாகனங்களில் 18 வாகனங்களின் எரிவு 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் எஞ்சிய வாகனங்கள் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) <u>விளைவற்ற சொத்துக்கள்</u> | | |
| திருத்தம் செய்ய முடியாத நிலைமையில் காணப்படும் திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் மூன்று ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்ட போதும் இதுவரை கைதவிர்ப்பு செய்யவோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்தியமைத்தல் பொருளாதார ரீதியில் சாதகமாக இல்லாததால் கைதவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |
| (இ) <u>வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்</u> | | |

| | | |
|---|---|---|
| திணைக்களத்திடமிருந்த காரொன்றை காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதனை கையளிக்கவோ அல்லது மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை முறையாக கையேற்க அல்லது கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சிற்கு கையளிப்பதற்காக ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |

(ஈ) <u>ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பயன்படுத்தல்</u>

| | | |
|---|---|---|
| வேறு அமைச்சு மற்றும் திணைக்களத்திற்குரிய 05 வாகனங்களும் UNDP நிறுவனத்திற்குரிய வாகனமொன்றும் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் இவ்வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அந்நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் தொலை நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்று வதற்காக அடிப்படையான தேசிய காணிப் பயன்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்று வதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிப் பயன்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்று வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத் திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றி தேசிய காணிப் பயன்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக திணைக்கள மட்டத்தில் எடுக்கக்கூடிய படிமுறைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) இறந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 27,998 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் இதுவரை தவறியிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படாத கடன் மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கடனை அறவிட முடியாதென கருதி பதிவழிப்பதற்காக திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது. |

## 4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்காக தடையான சிரேஷ்ட மட்டத்தில் 08 வெற்றிடங்களையும், மூன்றாம் மட்டத்தில் ஒரு வெற்றிடத்தையும் இரண்டாம் மட்டத்தில் 36 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிரேஷ்ட மட்டத்தில் 08 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மூன்றாம் மட்டத்திலும் இரண்டாம் மட்டத்திலும் உள்ள 36 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |